இனிமையான குழந்தைகளே! ஆமையைப் போல அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, மௌனமாக அமர்ந்து, சுயதரிசன சக்கரத்தை சுற்றுங்கள். அனைத்து சம்பந்தங்களின் இனிப்பாக இருக்கும் தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால், உங்களுடைய விகர்மங்கள் விநாசம் ஆகி விடும்.

கேள்வி: ஈசுவரிய குலத்தின் குழந்தைகளுக்காக தந்தையின் ஸ்ரீமத் என்ன?

பதில்: எப்பொழுது நீங்கள் இறைவனின் குழந்தைகளாகி உள்ளீர்களோ, அவருக்கு முன்னால் அமர்ந்துள்ளீர் களோ, பின் அவரை அன்புடன் நினைவு செய்யுங்கள். அவருடைய ஸ்ரீமத் படி நடந்து செல்லுங்கள். எந்த அளவிற்கு அவரை நினைவு செய்வீர்களோ, அந்த அளவிற்கு போதை இருக்கும். ஆனால் எனது வாடிக்கை யாளர்கள் பிடுங்கப்படுகிறார்கள் என்று மாயை இராவணன் பார்க்கும் பொழுது அவனும் யுத்தம் செய்கிறான். குழந்தைகளே, பலவீனமாக ஆகாதீர்கள் என்று பாபா கூறுகிறார். நான் உங்களுக்கு சக்தி அளிப்பதற்காக அமர்ந்துள்ளேன்.

பாடல்: பொறுமையாக இரு மனிதனே .. .. ..

ஓம் சாந்தி. ஹே குழந்தைகளே! என்று குழந்தைகளுக்கு யார் கூறுகிறார்? ஏனெனில் மனிதன் என்று ஆத்மாவிற்கு கூறப்படுகிறது. ஆத்மாவில் தான் மனம், புத்தி உள்ளது. எனவே இப்படி பெயர் வைத்துள்ளார்கள். பெயரோ நிறைய பொருட்களுக்கு நிறைய வைக்கிறார்கள். எப்படி பரமபிதா பரமாத்மா, பாபா, ஒரு சிலர் பிறகு (ஃபாதர்) தந்தை என்று கூறுகிறார்கள். எனவே பாபா என்ற வார்த்தை எல்லாவற்றையும் விட எளிமையானது. நீங்கள் யாருடைய குழந்தை கள் என்பது நினைவிற்கு வருகிறதா என்று பாபா கூறுகிறார். இப்பொழுது குழந்தை களாகிய நீங்கள் அமர்ந்துள்ளீர்கள். முன்னால் யார் இருக்கிறார்? பாபா அமர்ந்துள்ளார் என்று ஆத்மாக் கள் கூறுவார்கள். எவ்வளவு எளிய விஷயம் இது. ஆத்மாக்களாகிய நமக்கு பரமபிதா பரமாத்மா தந்தை என்பதை குழந்தைகள் அறிந்துள்ளார்கள். மனிதர்களோ சிறியவர்கள், பெரிய வர்கள் அனைவருக்கும் பாபா (அப்பா) என்று கூறி விடுகிறார்கள். மேலும் இங்கே ஆத்மா தனது தந்தைக்கு பாபா என்று கூறுகிறார். காட் ஃபாதர் என்று கூறுகிறார்கள். இப்பொழுது சரீரத்தின் தந்தைக்கோ காட் ஃபாதர் என்று கூறமாட்டார்கள். நாம் அந்த தந்தைக்கு முன்னால் அமர்ந்துள்ளோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். இது ஆத்மாவின் விஷயம் ஆகும். நான் யார் என்பதை சிவபாபா புரிய வைக்கிறார். நான் பரம ஆத்மா ஆவேன். நான் அனைத்து ஆத்மாக்களாகிய உங்களுடைய தந்தை, பரந்தாமத்தில் இருப்பவன்! எனவே என்னை பரம ஆத்மா என்று கூறுகிறார்கள். சேர்த்துக் கூறும் பொழுது பரமாத்மா என்று ஆகி விடுகிறது. எவ்வளவு சுலபமானது ! இங்கு யார் அமர்ந்துள்ளார்? சிவபாபா. அவர் இல்லை என்றால் இந்த பிரம்மா கூட இருக்க மாட்டார். குழந்தைகளாகிய உங்களது மனதில் எப்பொழுதும் அவருடைய நினைவு இருக்கிறது. இருப்பது அவர் கூட ஆத்மாவாக. எந்த வித்தியாசமும் கிடையாது. எப்படி ஆத்மா நட்சத்திரமாக உள்ளதோ அந்த நட்சத்திரத்தின் சாட்சாத்காரம் (காட்சி தெரிதல்) ஆகிறது. அதே போல தந்தையினுடையதும் நட்சத்திர ரூபத்தில் சாட்சாத் காரம் ஆகும். மற்றபடி அவர் மிகவும் தேஜோமயமானவர், சகித்துக் கொள்ள முடியாது என்றெல்லாம் கூறுகிறார்கள் என்றால் இது

மனதின் பாவனை ஆகும். மற்றபடி எப்படி நீங்கள் ஆத்மாவாக இருக்கிறீர்களோ, அதே போல நான் கூட ஆத்மா ஆவேன் என்று தந்தை சரியான படி புரிய வைக்கிறார். நான் கூட இந்த உடலில் இந்த ஆத்மாவிற்கு அருகில் புருவ மத்தியில் அமர வேண்டி உள்ளது. எனவே ஆத்மாக்களாகிய உங்களுக்குள் 84 பிறவிகளின் பாகம் நிரம்பி உள்ளது என்பதை அவர் அமர்ந்து புரிய வைக்கிறார். அது கூட ஒவ்வொருவருக்குள்ளும் அவரவர் பாகம் உள்ளது. ஆத்மா பரமாத்மா வெகுகாலம் பிரிந்திருந்தனர் என்று கூறுகிறார்கள். இப்பொழுது பரம ஆத்மா என்ற வார்த்தை தெளிவாக உள்ளது. அவரை பரமாத்மா என்று கூறுவதால் குழம்பி உள்ளார்கள். அவரும் ஆத்மா தான். ஆனால் எப்பொழுதும் பரந்தாமத்தில் இருக்கக் கூடிய பரம ஆத்மா ஆவார். பிரம்மாவை பரம ஆத்மா என்று கூற மாட்டார்கள். இவர்கள் எல்லோரும் ஜீவ ஆத்மாக்கள் ஆவார்கள். இவர்களில் ஒருவர் பாவ ஆத்மா, ஒருவர் புண்ணிய ஆத்மா என்று இருக்கிறார்கள். என்னை பாவ ஆத்மா அல்லது புண்ணிய ஆத்மா என்று கூறுவதில்லை என்று தந்தை கூறுகிறார். எனக்கு பரமாத்மா என்றே கூறப்படுகிறது. எனக்கும் பாகம் இருக்கிறது. ஒரு முறை வந்து பதீதமான (தூய்மையற்ற) உலகத்தைப் பாவனமாக ஆக்குகிறேன். பதீத பாவனரே வாருங்கள் என்று நினைவும் செய்கிறார்கள். ஆனால் நாம் பதீதமாக (தூய்மையற்றவராக) இராவண சம்பிரதாயத்தினராக இருக்கிறோம் என்பதை புரிந்திருக்கிறார்களா என்ன? அவசியம் பதீதமாக இருக்கிறார்கள். அதனால் தான் அழைக்கிறார்கள். கிருஷ்ணரை அழைப்பதில்லை. அவருக்கோ பரம ஆத்மா என்று கூறுவ தில்லை. பரந்தாமத்திலிருந்து வந்துள்ள நம் அனைவரின் தந்தைக்குத் தான் பரம ஆத்மா என்று கூறப்படுகிறது. இறைவன் அல்லது பகவான் என்று கூறுவதால் குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. தந்தை இந்த ஜீவ ஆத்மா மூலமாகப் புரிய வைக்கிறார். குழந்தைகளே அசரீரி ஆவீர்களாக என்று உங்களுக்குக் கூறுகிறார். நீங்கள் எனது குழந்தைகளாக இருந்தீர்கள். நான் உங்களை அனுப்பும் பொழுது சொர்க்கத்தில் உடல் தரித்து வந்தீர்கள். சக்கரம் சுற்றி சுற்றி இப்பொழுது நீங்கள் 84ன் சக்கரத்தை முடித்து விட்டீர்கள். இச்சமயத்தில் அனைவரும் இராவணனின் குழந்தைகளாக இருக்கிறார்கள். இராவணன் தான் பதீதமாக ஆக்கி விட்டுள்ளார். இப்பொழுது நீங்கள் ஈசுவரிய குழந்தைகளாக ஆகி உள்ளீர்கள். இப்பொழுது பாபா வந்துள்ளார். அசுர சம்பிரதாயத்தை தெய்வீக சம்பிரதாயமாக ஆக்குவது என்னுடைய பாகம் ஆகும் என்று கூறுகிறார். நான் கூட நாடகப்படி எனக்கு குறித்த நேரத்தில் கல்பத்தின் சங்கமயுகத்தில் வருகிறேன். கலியுகம் பதீதமான பழைய தமோபிரதான உலகம் ஆகும். அப்பொழுது நான் சூரியவம்ச சந்திரவம்ச குலத்தை ஸ்தாபனை செய்ய வருகிறேன். அவை இல்லாமலிருக்கும் பொழுது தானே நான் ஸ்தாபனை செய்வேன். பிறகு சூரிய வம்சத்தினர், சந்திர வம்சத்தினர் இருக்கும் பொழுது வைசியர், சூத்திர வம்சத்தினர் இருக்க மாட்டார்கள். இப்பொழுது தெய்வீக சந்ததியினர் ஆவதற்காக நீங்கள் ஈசுவரிய சந்ததியினர் ஆகி உள்ளீர்கள். எனவே தந்தையுடன் யோகம் இருக்க வேண்டும். அப்பொழுது விகர்மங்கள் விநாசம் ஆகும். (எவர் ஹெல்தி, எவர் வெல்தி) என்றும் ஆரோக்கியம் மற்றும் செல்வம் உடையவர் ஆக வேண்டும் என்றால் சுய தரிசன சக்கரத்தைச் சுற்ற வேண்டி உள்ளது. பாபாவை நினைவு செய்ய வேண்டும். இதில் தான் உழைப்பு உள்ளது. எவ்வளவு நேரம் பாபாவை நினைவு செய்கிறோம் என்று சார்ட் வையுங்கள். எந்த அளவு நினைவில் இருப்பீர்களோ அந்த அளவிற்கு அத்தீந்திரிய சுகத்தின் உணர்வு ஏற்படும். அதனால் தான் அதீந்திரிய சுகம் பற்றி கேட்க வேண்டும்

என்றால், கோபி வல்லபரின் கோப கோபியர்களிடம் கேளுங்கள் என்று கூறப்படுகிறது. வல்லபர் என்று தந்தைக்குக் கூறப்படுகிறது. தந்தையின் ரூபம் கூட மகனைப் போன்றே இருக்கும். அதே போல ஆத்மாக்களின் தந்தை கூட ஆத்மாவே ஆவார். ஆனால் பரந்தாமத்தில் இருப்பவர் ஆவார். ஒரு வேளை அந்த விதை கீழே சக்கரத்தில் வந்து விட்டால் விருட்சம் மேலே போய் விடும். எப்படி அந்த விருட்சத்தில் விதை கீழே, விருட்சம் மேலே இருக்கும். ஆனால் இது தலைகீழான விருட்சம் ஆகும். இதன் விதை ரூபமான பரம ஆத்மா பரந்தாமத்தில் நிவாசம் செய்கிறார். ஆத்மாக்கள் கூட பாகம் ஏற்று நடிக்க மேலிருந்து கீழே வருகிறார்கள். கிளைகள், கொடிகள் வெளி வந்து கொண்டே இருக்கின்றன. உங்களை இராவணன் கறுப்பாக ஆக்கி விட்டுள்ளான் என்று தந்தை கூறுகிறார். இப்பொழுது நீங்கள் வெண்மையாக (தூய்மையாக) ஆக வேண்டும். கிருஷ்ணர் மற்றும் நாராயணர் இருவரையும் கறுப்பாக ஆக்கி விட்டுள்ளார் கள். இலட்சுமியை வெண்மையாக அமைக்கிறார்கள் ஏன்? காமச் சிதையிலோ இருவருமே அமர்ந்திருக்கக் கூடும். கிருஷ்ணருக்கு அவரை தட்சக பாம்பு கொத்தியது என்று கூறுகிறார்கள். நாராயணரை பின் யார் கொத்தியது? எதுவுமே புரிந்து கொள்வது இல்லை. படங்கள் ஆகியவை எல்லாம் கூட இராவணனின் வழிப்படியே அமைத்துள்ளார்கள். இப்பொழுது பாபா ஸ்ரீமத் அளித்து இராவணனிடமிருந்து விடுவிப்பதற்காக வந்துள்ளார். நான் அனைவருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல் ஆவேன். ஸ்ரீ ஸ்ரீ 108 ஜகத்குரு என்று பட்டம் கூட இவருடையது ஆகும். ஜகத் - உலகிற்கு சத்கதி செய்கிறார். கிரந்தத்தில் இவரை நிறைய மகிமை செய்து எழுதி உள்ளார்கள். சத்குரு - உண்மையான தலைவன், உண்மையான கண்டத்தை ஸ்தாபனை செய்பவர். பாபாவிற்கு இவை எல்லாமே மனப்பாடமாக இருந்தது. ஆனால் அர்த்தம் தெரியா மல் இருந்தது. தன்னை மிகவும் தார்மீகமானவர் என்று நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் இருந்தது இராவணனின் குலத்தினராக, இப்பொழுது நீங்கள் இறைவனின் குலத்தினராக ஆகி உள்ளீர்கள். எனவே எவ்வளவு அன்புடன் அவரை நினைவு செய்ய வேண்டும். பாபா நீங்கள் எவ்வளவு இனிமையானவர். எங்களை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறீர்கள். ஹெவென்லி காட் ஃபாதரை எவ்வளவு நினைவு செய்வீர்களோ அவ்வளவு போதை ஏறும். இப்பொழுது யாருக்கு முன்னால் அமர்ந்துள்ளீர்கள்? ஹே செல்லமான குழந்தைகளே! நான் உங்களது பரமபிதா ஆத்மாக்களாகிய உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது என்னுடைய ஸ்ரீமத் படி ஏன் நடப்பதில்லை? ஆனால் காமம் என்ற பூதம் வீழ்த்தி விடுகிறது. ஏன் பலவீனமாக ஆகிறீர்கள் என்று தந்தை கூறுகிறார். ஸ்ரீமத் கிடைத்துக் கொண்டிருக்கிறது. பின் அசுர வழிப்படி ஏன் நடக்கிறீர்கள்? இந்த யுத்தமோ செய்ய வேண்டி உள்ளது. எனது வாடிக்கை யாளர்கள் பிடுங்கப்படுகிறார்கள் என்று மாயை நினைக்கிறது. எனவே சண்டையிடுகிறது. உங்களுக்கு தந்தை சக்தி கொடுத்துக் கொண்டிருக்கிறார். இவ்வளவு பாடம் படிப்பிக்கிறார். எல்லா வேத சாஸ்திரங்களின் சாரத்தைப் புரிய வைக்கிறார். சூட்சும வதனத்திலோ கூற மாட்டார். விஷ்ணுவின் நாபியிலிருந்து பிரம்மா வெளிப்பட்டார் என்று காண்பித்துள்ளார்கள். சூட்சும வதனத்தில் நாபி எங்கிருந்து வந்தது? என்னவெல்லாம் எழுதி உள்ளார்கள் ! இப்பொழுது உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் ஞானம் பரம்பரையாக வருவதில்லை. இங்கேயே முடிந்து போய் விடுகிறது. பின்னால் எழுதுகிற சாஸ்திரங்கள் ஆகியவை பரம்பரையாக

வருகின்றன. ஆனால் இந்த ஞானமோ மறைந்து போய் விடுகிறது.

எனது வழிப்படி நடந்து செல்லுங்கள், ஆத்ம உணர்வுடையவர் ஆகுங்கள் என்று இப்பொழுது தந்தை கூறுகிறார். இதில் பந்தய ஓட்டமாக ஓடி, எனது கழுத்தின் மாலை ஆகுங்கள். இது புத்தியின் பந்தய ஓட்டமாகும். சந்நியாசிகள் அசரீரி ஆவீர்களாக ! என் ஒருவனை நினைவு செய்யுங்கள் என்று கூற முடியாது. பரமாத்மா அனைவருக்கும் கூறுகிறார். ஏனெனில் அனைவரும் எனது குழந்தைகள் ஆவார்கள். அனைவரையும் திரும்பி அழைத்துச் செல்ல வந்துள்ளேன். ஆனால் குழந்தைகள் நேரிடையாகக் கேட்கிறார்கள். முழு உலகமோ கேட்ப தில்லை. சிவராத்திரி கொண்டாடுகிறார்கள். சிவனுடைய கோவில் கூட உள்ளது. அவசியம் வந்துள்ளார். ஆனால் சிவனுடையது இவ்வளவு பெரிய படம் கிடையாது. அவரோ நட்சத்திரம் ஆவார். ஒரு வேளை அதை கூறினீர்கள் என்றால், கோவிலின் படம் தவறா? என்பார்கள். எனவே தந்தை புரிய வைக்கிறார், குழந்தைகளே, நான் கூட ஆத்மா ஆவேன். நீங்கள் மட்டும் பிறப்பு இறப்பில் வருகிறீர்கள். நான் வருவதில்லை. அப்பொழுது தானே நான் உங்களை விடுவிக்க முடியும். நான் பதீத பாவனன் ஆவேன். எனவே அவசியம் பதீத உலகத்தில் வர வேண்டி இருக்கும் அல்லவா? ஒரு வேளை பதீத பாவனன் என்று கூறவில்லை என்றால் புதிய உலகத்தை அமைக்கிறார் என்று நினைப்பார்கள். பிரளயம் ஆகி விடுகிறது. பின் புதிய சிருஷ்டியைப் படைக்கிறார் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர் பதீத பாவனர் என்று கூறப்படுகிறார். எனவே இந்த படைப்போ அனாதி. இதில் பிரளயம் ஆவதில்லை என்று நிரூபணமாகிறது. பதீதமாக மட்டும் ஆகிறது. அதை பாவனமாக ஆக்குகிறேன். எனவே நான் உங்களை நரனிலிருந்து நாராயணராக ஆக்குவதற்கு நந்தி வாகனத்தில் (பிரம்மா) அல்லது பாக்கியசாலி ரதத்தில் வருகிறேன் - நாம் சூரிய வம்சத்தினர் ஆக வேண்டும் என்று எல்லோரும் விரும்பவும் செய்கிறார்கள். கதை கூட உள்ளது - ஒரு பக்தர் நான் இலட்சுமியை மணம் முடிக்க முடியுமா? என்று கூறினார். நாரதர் பக்தராக இருந்தார் அல்லவா? எனவே நீ உனது முகத்தைப் பார் என்று கூறினார்கள். முதலில் குரங்கிலிருந்து (பந்தர்) கோவிலுக்கு (மந்திர்) உகந்தவராக ஆகுங்கள். அப்பொழுது தான் இலட்சுமியை மணம் முடிக்க முடியும். இப்பொழுது நீங்கள் கோவிலுக்கு உகந்தவர் ஆகிக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த முழு விஷயங்களும் இந்த நேரத்தினுடையதே ஆகும். இவை எல்லாமே உங்களுக்கு யார் கூறிக் கொண்டிருக்கிறார்? சிவபாபா பிரம்மா தாதாவின் புருவ மத்தியில் அமர்ந்து உங்களுக்கு புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். எப்படி இவரது ஆத்மா புருவ மத்தியில் அமர்ந்திருக்கிறது. எனவே அவசியம் அவர் அருகில் அமர்ந்திருக்கக் கூடும் அல்லவா? இது ஞானம் நிறைந்த (நாலேஜ் ஃபுல்) தந்தை உங்களுக்கு முதல், இடை, கடை பற்றிய முழு இரகசியத்தைப் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். அதனால் உங்களுக்கு சுயதரிசன சக்கரத்தைச் சுற்றுவது சுலபமாக ஆகி விடுகிறது. சுயதரிசன சக்கரத்தைச் சுற்றுவதால் உங்களது விகர்மங்கள் விநாசம் ஆகும். இல்லையென்றால் தண்டனைகள் வாங்குவீர்கள். வெற்றிமாலையில் கூட வர மாட்டீர்கள். ஆமையைப் போல (சுதந்திரமாக) வேலை இல்லாமல் இருக்கும் பொழுது மௌனமாக அமர்ந்து சக்கரத்தைச் சுற்றுங்கள். இப்பொழுது நீங்கள் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும். இந்த கடைசி பிறவியில் தூய்மையாக இருங்கள். இதற்குத் தான் சமூக அந்தஸ்து, பதீதமாக ஆவதற்கான நியமங்கள் ஆகியவற்றை துண்டித்து விடுங்கள். வேறு யாரையுமே நினைவு செய்யாதீர்கள்

என்று கூறப்படுகிறது. நாம் இறந்தால் உலகமே இறந்து விட்டது போல, அசரீரி ஆகி என்னுடையவர் ஆனீர்கள் என்றால் விகர்மங்கள் விநாசம் ஆகி விடும். எல்லோருமே இறந்தே ஆக வேண்டும். பின் யார் யாருக்காக அழுவார்கள்? ஹிரோஷி மாவில் எல்லோரும் இறந்து விட்டார்கள். யாருமே அழுதவர்கள் பிழைக்கவே இல்லை. எனவே இப்பொழுது அழக்கூடிய உலகத்திலிருந்து திரும்பிச் செல்ல வேண்டும். இந்த அசுத்தமான உலகத்திலோ ஒவ்வொருவருடைய உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றிலும் புழுக்கள் படிந்துள்ளன. அதை ஏன் நினைவு செய்ய வேண்டும்? சொர்க்கத்தில் இது போல சரீரங்கள் இருக்குமா என்ன? அங்கோ ஒவ்வொரு உறுப்பிலும் நறுமணம் இருக்கும். பாபா எப்படி அசுத்த மான துர்நாற்றமுடையதை மலராக ஆக்குகிறார். எனவே அவர் வர வேண்டியதும் இது போன்ற பழைய நீண்ட செருப்பில் தான் வர வேண்டி உள்ளது. தாராளமாக வீட்டில் இருங்கள். ஆனால் ஸ்ரீமத்படி நடந்து செல்லுங்கள் என்று பாபா கூறுகிறார். விகாரத்தில் செல்லாதீர்கள். உங்களுக்கு முன்னால் சிவபாபா அமர்ந்துள்ளார். அவரை மறக்காதீர்கள். நல்லது.

பாடல் பூமியை ஆகாயம் அழைத்தது.. பூமியில் இருப்பவர்களை ஆகாயத்தில் இருக்கக் கூடிய தந்தை அழைக்கிறார். இப்பொழுது என்னிடம் வர வேண்டி உள்ளது. எனவே (நஷ்டோ மோகா) மோகத்தை அழித்தவர் ஆகுங்கள். நான் உங்களுக்கு சொர்க்கத்தின் ஏராளமான சுகத்தை அளிப்பேன். தந்தை அனைத்து உறவுகளின் சுவையாக இருக்கிறார். மாமா, சித்தப்பா இவர்கள் எல்லோருமே உங்களுக்கு துக்கம் அளிப்பவர்கள். உங்களுடையது முழு அசுர உலகமான நரகத்தின் சந்நியாசம். சந்நியாசிகளினுடையது வீட்டினை மட்டும் துறந்து செல்வது. நீங்கள் இந்த அசுத்தமான உலகமான நரகத்தை மறக்க வேண்டும்.

இச்சமயத்தில் மனிதர்களுக்கு சிறிதளவு பணம் கிடைத்தால் கூட நாங்களோ சொர்க்கத்தில் இருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் இந்த உலகத்தில் ஒருவர் எவ்வளவு தான் செல்வந்தராக இருந்தாலும் சரி, திவால் ஆகி விட்டார், ஆகாய விமானம் விழுந்து விட்டது என்றால், எல்லாமே முடிந்து போய் விட்டது. பிறகு அழுது புலம்புகிறார்கள் ஆனால் அங்கோ விபத்துக்கள் என்ற விஷயமே கிடையாது. யாருமே அழுது புலம்புவது இல்லை. பாபா கூறுகிறார், நல்லது, நீங்கள் சொர்க்கத்தில் இருக்கிறீர்கள் என்றால் மகிழ்ச்சியாக இருங்கள். நான் நரகத்தில் இருக்கும் ஏழைகளுக்காக வந்திருக்கிறேன். தானம் கூட ஏழைகளுக்குக் கொடுக்கப் படுகிறது. பணக்காரர் பணக்காரனுக்கு தானம் செய்கிறார்களா என்ன? நானோ எல்லோரையும் விட செல்வந்தன் ஆவேன். நான் ஏழைகளுக்கு தானம் கொடுக்கிறேன். இச்சமயத்தில் இருக்கும் செல்வந்தர்களோ தங்களுடைய பணத்தின், நாகரீகத்தின் அந்தஸ்தின் போதை யிலேயே மூழ்கி இருக்கிறார்கள்.

நல்லது. இது இந்திர பிரஸ்தம் என்று பாபா புரிய வைக்கிறார். இங்கு அன்னங்கள் போன்றோர் முத்தை உட் கொள்வார்கள். மற்றபடி கொக்கு போல இருப்பவர்கள் கற்களைத் தான் எடுப்பார் கள். எனவே இங்கு அன்னங்கள் (குணத்தை கிரகிப்பவர்கள்) மட்டுமே வர வேண்டும். கொக்கு (அவகுணங்களை பார்ப்பவர்கள்) வரக் கூடாது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள்

மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தந்தையின் ஸ்ரீமத்படி நடந்து ஆத்ம உணர்வுடையவராக ஆகி தந்தையின் கழுத்தின் மாலை ஆக வேண்டும். தந்தையின் நினைவில் இருந்து அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்ய வேண்டும்.

2. இந்த உலகத்தின் மீதுள்ள மோகத்தை முழுமையாக நீக்கியவராக (நஷ்டோ மோகா) ஆக வேண்டும். எந்த ஒருவருடைய சீ - சீ உடலையும் நினைவு செய்யக் கூடாது.

வரதானம்: சேவையின் பந்தனத்தின் மூலமாக கர்மபந்தனத்தை முடித்து விடக் கூடிய விஷ்வ சேவாதாரி ஆகுக !

இல்லறத்தில் இருக்கையில் கணக்கு வழக்கு இருக்கிறது கர்மபந்தனம் இருக்கிறது என்று இப்படி ஒருபொழுதும் நினைக்காதீர்கள் ஆனால் இது கூட சேவை ஆகும். சேவையின் பந்தனத் தில் கட்டுப்பட்டு விடும்பொழுது கர்மபந்தனம் முடிந்து போய் விடுகிறது சேவையின் உணர்வு (பாவம்) இல்லாத வரையும் கர்மபந்தனம் இழுக்கிறது கர்மபந்தனம் இருந்தது என்றால் துக்கத்தின் அலைகள் வரும். சேவையின் பந்தனம் இருந்தது என்றால் மகிழ்ச்சி ஏற்படும். எனவே, கர்மபந்தனத்தை சேவையின் பந்தனம் மூலம் முடித்து விடுங்கள். விஷ்வ சேவாதாரி உலகத்தில் எங்கு இருந்தாலும் உலக சேவையின் பொருட்டு தான் இருப்பார்.

சுலோகன்: தங்களது தெய்வீக சொரூபத்தின் நினைவில் இருந்தீர்கள் என்றால், உங்கள் மீது யாருடைய வீணான பார்வையும் பட முடியாது.